381

பிரஜோத்பத்தி-ஞு
புரட்டாசி-மீ 10உ

1931-ஞு
செப்டம்பர் மீ 26உ

17 OCT 1931

ஸ்ரீ:
ஸ்ரீமதேரங்கஞுதபாப்பிர்ஹ்மணே நம:

ஸநாதன வைதிகானுஷ்டானங்களுடைய
யதார்த்த விஷயத்தை அறிவிக்கும்,

"யதார்த்தவாதினீ"

என்ற

ஓர் மாதாந்தர பத்திரிகை.

5-வது ஸஞ்சிகை.

பத்திராதிபர்,
வங்கீபுரம்-வித்வான் R. V. இராமானுஜாசாரியார்

தெற்கு சித்திரவீதி,	உள்ளூருக்கு வருஷச்சந்தா ரூ. 1—0
164 நெ. வீடு,	அயலூர்களுக்கு வருஷச்சந்தா ரூ. 1—8
ஸ்ரீரங்கம் S. I. RY.	தனிப்பிரதி 1க்கு விலை அணா. 0—2

1931-ஞு

கோவாபரேடிவ் பிரஸ், திருச்சி.

ஓர் காரியத்தை ஆசரிப்பவன், அக்காரியத்திற்கு ஆசாரியனே ஒழிய, வீட்டில் உறங்கிகொண்டோ, வேடிக்கை பார்த்துக்கொண்டோ, வம்பளந்துகொண்டோகாரிய ஸம்பந்தமில்லாதிருப்பவர்கூட ஆசாரியராக மாட்டார். இப்படியிருநகாலும் "ஜடம் குருரீதிப்பிரமன்" ஜடனைக்குருவாகப் பிரமித்துக்கொண்டு என்ற வேங்கடாத்வரி காவியம்போல், சிலர் கோவில் வைதிககாரியமின்னதென்றுகூட அறியாதவருக்கு ஆசாரியகத்தை ஸ்தாபிக்கக்கருதி, மரியாதைகளுமுண்டென பிரமிக்கின்றார்கள்.

இந்த அங்குரார்ப்பணதினத்தில் ஆசாரியன் பெரிய கோவிலுக்குள் துவஜஸ் தம்பதினருகிலும், சேனை முதலியார் ஸன்னிதி வாசலிலும், ஜயவிஜயர்கள் வாசலிலும், தாயார் ஸன்னிதி முன் மண்டபத்திலும் ஸ்ரீ பாஞ்சநாந்திர சாஸ்திரப்படி ஈரிரண்டு தடவைகளாக ஸேவித்துவருவது நீண்டகால வழக்கமாருக்க ஸ்ரீ டி. மு கோ. அஸல் நெ. 2-of 1930 வது கேஸ் ஆரம்பமான பிறகு ஷெ ஸேவையானது தேவஸ்தானம் அதிகாரிகளால் நிறுத்தும்படி செய்யப்பட்டிருக்கிறது. ஆகையால் ஸேவையில்லாமலே காரியம் நடந்து வருகிறது. ஸேவையாவது நமஸ்காரம் செய்தல்.

தாற்காலிக விசேஷங்கள்.

1. நாச்சியார் ஸன்னிதியில் 9-8-31-ல் மணியகாரருக்குபபத்து ரூ. அபராதம் போட்ட பிரபுக்கள், நான்முகன் கோட்டை வாசலுக்குள்ளெங்கும் பெருமாளை எழுந்தளப்பண்ண புண்யாஹவாசனமே வேண்டாமென்று சொன்னால் 2-க்கும் அர்த்தமில்லை.

ஓம் :
பரப்பிர்ஹ்மணே நம :

யதார்த்தவாதினீ.

7 OCT 1931

ஆத்ம தத்வம்.

உலகமானது அறிவுள்ளவைகளாலும், அறிவில்லாதவைகளாலும்நிறை யப்பட்டு அம்மயமாகவே காணப்படுகின்றது. இவற்றுள் அறிவுள்ளவை களை வேதாந்திகள் ஜீவர்களென்றும், அறிவில்லாதவைகளை ஜடங்களென் றும் கூறுவார்கள். ஜடங்களாவன பிருதிவீ, அப்பு, தேயு என்ற தேஜஸ், வாயு, ஆகாயமென்பன. இவ்வைந்துகளின் குணங்களே கந்தம், இரஸம் உருவமென்றரூபம், ஸ்பரிசம், சப்தமென்பன. இப்பத்தும் பிரத்தியக்ஷ மாய்க்காணப்படுபவைகள். இவையன்றி வேறு சில தத்துவங்களுமுள. பிரமாணத்தால் நிச்சயிக்கப்படுகின்றவைகளுக்கு தத்துவங்களெனப்பெயர். இத்தத்துவங்கள் 24-எனவும், 25-எனவும், 26-எனவும், 96-எனவும், தத்து வவாதிகள் பலவிதமாய்ப் பிரித்துப்பேசுவார். பகவத் கீதையில் ஓரிடத் தில் 10-தத்துவங்களாகவும் வகுக்கப்பட்டிருக்கின்றது. சிலவிடங்களில் மூன்றாகவும், சிலவிடங்களில் ஒன்றேயாகவும் கூறப்பட்டிருக்கின்றது. இப்பிரிவுகளெல்லாம் வேதாந்தத்தில் தேற்சியை யடைந்தபின் உணர வேண்டியவை.

ஸாதாரணமாக ஒருவர் வேதாந்த சாஸ்திரப்படி தத்துவங்களை அறிய வேண்டுமென்றால் சிறிது சிறிதாய்ப்படித்தும், பெரியோரிடம் கேட்டும், தன்ஊஹத்தால் அனுபவித்தும், அதன் பேரில் தான் தேற்சியையடைய வேண்டும். ஷை பிருதுவி முதலியதுகளுக்குப் பஞ்சமஹா பூதங்களெ னப்பெயர். கந்தம் முதலிய ஐந்துகுணங்களுக்கும் தன்மாத்திரை களெனப்பெயர். ஆக இவை பத்து. இவற்றுள் பிருதிவீ என்பது கடினமாய் மணத்தைக்குணமாகவுடையவஸ்து. அப்பு என்பது இரஸத்தை குணமாகவுடைய திரவவஸ்து. தேயு என்பது ரூபத்தைக்குணமாகவுடைய வஸ்து. வாயு என்பது பரிசத்தைக்குணமாகவுடையவஸ்து. ஆகாய மென்பது சப்தத்தைக்குணமாகவுடையவஸ்து. குணமென்பதற்கு தன்மை யெனப்பொருள். அதாவது எந்த வஸ்துவும் ஓரோர் தன்மையை உடைய

தாயிருக்கும். மாடு என்றால் நான்கு கால்கள், ஒருவால், இரண்டுகொம்புகள், தொங்கும் சதையுள்ள கழுத்து இத்தியாதித்தன்மைகளையுடையது, என்று இலக்கணம் கூறவேண்டும். கழுத்தில் சதை தொங்காததால் எருமை, ஆடு முதலிய மிருகங்கள் பசு மாடாகா. குதிரை கழுதை இவை முதலியவைகளுக்குக் கொம்புமில்லாததால் மாடென்றே கூறவிடமில்லை. ஆகையால் ஒவ்வோர் வஸ்துவினிடம் ஒவ்வோர் தன்மை வெவ்வேறாயிருக்கும். எலுமிச்சம்பழம் எவ்விலக்கணமுடையது? என்றுகேட்டால், உருண்டையாய், மஞ்சளாய், புளித்தரஸத்தோடு கூடியதாய், கைத்தலத்திற்குள்ளடங்கிய பருமனுள்ளதாய் மெல்லிய தோலையுடையதாயிருக்கும் என்று மறுமொழி கூறவேண்டும். இப்பொழுது புளியமரத்தின் பழம் புளித்தசுவையையுடைத்தாயிருந்தாலும் உருண்டையாயில்லாததால் எலுமிச்சம்பழத்தின் தன்மையில்லாதது. இதுபோலவே மற்ற எந்த வஸ்துக்களுக்கும் வெவ்வேறு தன்மைகளுமுள. தன்மையாவது குணமென்று முன்பு உரைக்கப்பட்டது. இதை அந்தந்த வஸ்துவின் தருமமெனவும் சொல்வதுண்டு. முயற்கொம்பு முதலானவை இல்லாத வஸ்துவாதலால் தருமியுமில்லை, தருமமுமில்லை. தருமியாவது தருமத்தையுடையது. இத்தருமத்தை அததன் விசேஷமெனவும் கூறுவதுண்டு. நிர்விசேஷமென்றால் யாதொரு விசேஷமுமில்லாததெனப் பொருள். பிருதிவீ, அப்பு முதலியயாவும் ஒவ்வோர் விசேஷத்தோடு கூடியது. முயற்கொம்புபோன்றதுதான் நிர் விசேஷவஸ்து. அதாவது இல்லாதது என்ற சொல்லுக்குப் பொருளாகும் வஸ்து, நிர்விசேஷ வஸ்துவெனக்கருத்து. ஆக இப்பொழுது பிருதுவீ முதலாகிய பஞ்ச பூதங்களும் ஸவிசேஷ வஸ்துக்களாயின. இவற்றின் குணங்கள் ஐந்து. இவைகளே விசேஷங்களென்ற குணங்களாகும் தருமங்கள். கடினத்துவம் முதலிய வேறு தருமங்களுமுள. ஒருவஸ்துவிற்குப் பலதருமங்களிருக்கலாம். அதெவ்விதமெனில், "கருத்துத்தடித்துயர்ந்தவன் தேவதத்தன்" என்றால் ஒருமனிதனிடம் கருப்பு, பருமன், உயர்வு என்ற விசேஷங்களேற்பட்டன. ஆகையால் ஒருவஸ்துவினிடமே பலவிசேஷங்கள் காணக்குறையில்லை. ஆகப்பூதங்கள் ஐந்து, அவற்றின் குணங்களைந்து, ஆகப்பத்து தத்துவங்கள் கூடின. இவற்றின் காரியங்கள் பத்து. அவையாவன; வாக்கு, பாதம், பாணி, பாயு, உபஸ்தம் என்ற கருமேந்திரியங்கள் ஐந்து. கண், மூக்கு, நா, செவி, துவக்கு என்ற ஞானேந்திரியங்கள் ஐந்து ஆகப்பத்து. கருமமாவது காரியம். அதாவது வினை, நீட்டல், மடக்கலாதியானவினைகளைச்செய்ய உதவியான பொறிகள். ஞானமாவது அறிவு. அறியும் தன்மையுடையவை. ஞானேந்திரியங்களெனப்பொருள். ஆக

இவைபத்து, முன்பு கூறப்பட்ட தத்துவங்கள் பத்து, முழுமையும் சேர்ந்து இருபது தத்துவங்கள். இவையல்லாது இரண்டுவித இந்திரியங்களேயும் அததன் காரியங்களில் தூண்டுவது ஒன்று. அதாவது மனம் என்ற உட்கருவி. இம்மனமானது எப்படி எப்படியெல்லாம் இச்சிக்குமோ, அப்படி அப்படியெல்லாம் அந்தந்த இந்திரியங்கள் அததன் வேலையைச்செய்யும். அதாவது :—மனம் ஒன்றைப்பார்த்து அதன் ரூபத்தை கிரகிக்கவேண்டுமெனஇச்சித்தால் அப்படியேகண் என்ற இந்திரியமானது விரும்பியவஸ்துவின் ரூபத்தை வாங்கி மனத்திடம் சேர்க்கும். அப்பொழுது பார்க்கப்பட்டதாகும். இதுபோலவே வீட்டிலுள்ளவனே வீதிக்குப் போக்கவேண்டுமென்று அவ்வுடலிலுள்ள மனமானது, விரும்பினுல், உடனே பாதமென்ற கருமேந்திரியம் வேலைசெய்து வீதியிற்கொண்டுபோய்விடும். ஆகக்கூடி இதுவேண்டும், இதுவேண்டாமென்று எண்ணுவது மனமானதால், மற்றவை அடிமைகளென்றும், மனம் அரசனென்றும் ஏற்பட்டது. இதனுல் மனமென்ற உட்கருவியே இத்தேகம் முழுமைக்கும் இரக்ஷகமாக ஏற்பட்டது. இம்மனதின் கீழிலேயே பத்து இந்திரியங்களும், அவைகளுக்காதாரமான உடலும் அடங்கியிருப்பதாக இதன்கருத்து. ஆக இப்பொழுது 21-தத்துவங்கள் கணக்கிடப்பட்டன. மனமென்பது சங்கற்பிக்க உதவியான ஓர் தத்துவமாதலாலும், சஙகற்பமென்பது ஓர்அறிவின் காரியமாதலாலும் அம்மனத்தத்துவத்தின் பேரில் புத்தி என்ற ஓர் தத்துவம் வேண்டிவருகிறது. புத்தியாவது அறிவு என்பது போதம் செய்து கொள்வதால் புத்தியென்றும், அறிந்துகொள்வதால் அறிவென்றும் பெயரிடலாயிற்று. ஆக 22 தத்துவங்களாயின. இதன்மேல் இவ்வறிவைப்பற்றி சோதிக்குங்கால் இத்தோடேயே தத்துவங்கள் ஆயினவா, அல்லது இதற்குமேல் அறிவையுடையவன் என்ற மற்ருேர் தத்துவமொன்று வேண்டுமா? என்ற கேள்விபிறக்கிறது. அது வேண்டுவதில்லையென சிலர் கூறுகின்ருர்கள். அறிவென்பது ஓர் தருமமாதலால் அதையுடையது ஒன்று வேறுவேண்டுமெனச்சிலர் கூறுகின்ருர்கள். அறிவென்ருல் ஞானமென்று வடமொழியில் சொல்லப்பட்டிருக்கிறது. ஞானமென்பது கேவலம் குணமாத்திரமாதலால் குணியான மற்ருேர் வஸ்து வேண்டுமென்றும், அதற்கு ஞாதாவென்றும் சிலவேதாந்திகள் முடிவு செய்கின்றனர். இதையே ஜீவாத்மா எனவும் மொழிகின்றனர். இப்படிப்பட்ட ஜீவாத்மாவை கீழ்க்கூறப்பட்ட 23 தத்துவங்களாகிய ஜடதத்துவமல்லவென்றும், இவையெல்லாம் எப்பொழுதும் தன்னிலேவிட்டு வேறுநிலைக்குமாறக்கூடியவையென்றும், இவைகளேக்காட்டிலும் வேருன ஜீவாத்மா என்பது வேறுதத்துவமென்றும், இதுவேறுபடாது ஒரே நிலை

மையிலிருக்கக்கூடியதென்றும், ஆகையால் நித்தியமென்றும், மற்றவை 23-ம் அநித்தியமென்றும் வேதாந்திகளின் தீர்மானம். மேலும் இந்த ஜீவாத்மா என்றது எப்பொழுது தனி தத்துவமாயிற்றோ, நித்தியமாகவு மேற்பட்டதோ, அப்பொழுது 23-தத்துவமயமான இவ்வுடலழிந்தாலும் ஷ ஜீவாத்மா அழியாமல் மற்றோர் உடலைப்பெறுவானென்பதும் வேதாந்திகளின் கொள்கை.

இந்த நிலையில் ஓர் பெருத்த ஸந்தேகமுண்டாயிற்று. அதாவது—தேகமே ஆத்மாவா? அல்லது தேகத்தைக்காட்டிலும் ஜீவாத்மா என்ற வஸ்துவேறா ? என்பது. அப்பொழுது உலகாயதன் தலை நீட்டத்தொடங்கினான்.

வினா—உலகாயதன்—ஓவேதாந்தி ! உமக்கு எத்தனை பிரமாணங்கள்.

விடை—வேதாந்தி—உலகாயதனே எங்களுக்கு பிரத்யக்ஷம். அனுமானம், ஆகமம் என்ற மூன்று பிரமாணங்கள்.

வினா—அவை மூன்றுக்கும் விஸ்தாரமாய் தாற்பரியம் சொல்வீராக.

விடை—பிரத்தியக்ஷமென்றால்; கண், காது, நா, மூக்கு, துவக்கு என்ற ஐந்து புலன்களுக்கும் படும்படியானது. அனுமானமென்றால், பிரத்யக்ஷத்தில் ஓர் குயவனால் ஓர் குடம் செய்யப்படுவதைக்கண்டு, இது போல் இவ்வுலகமும் ஓர் ஈசுவரனால் படைக்கப்பட்டிருக்க வேண்டுமென்று ஊஹிப்பது. அனுமானிப்பதால் அனுமானமென பெயரிடலாயிற்று. ஆகமமாவது ; பிரத்யக்ஷத்தாலும், அனுமானத்தாலும் கண்டு பிடிக்க முடியாத வஸ்து முதலியனவைகளை, எந்த நூலின் வாக்கியத்திலுள்ள சொற்களால் கண்டுபிடிக்கின்றோமோ, அச்சப்தாவளிக்கு ஆகமமென்று பெயர். அது கிருதகமென்றும், அகிருதகமென்றுமிருவகைப்படும். கிருதகமாவது—அகிருதகமான சொற்கூட்டங்களைத்தமதுஞானதிருஷ்டியால் கண்டுபிடித்து, அவற்றின் சுருக்கமான தெளிவை எந்த ஞானிகள் எழுதிவைத்திருக்கின்றனரோ, அவர்களுடைய நூல்களெல்லாம் கிருதகங்கள். அப்பெரியோர்களின் ஞானதிருஷ்டியால் பார்க்கப்பட்டவைகளே அகிருதகங்கள். இவற்றை வேதமென்றும், மறை என்றும் நாங்கள் கூறுவோம். ஒருவராலுமெழுதப்படாது ஸநாதனமாய்த் தானாகவே உள்ளது அகிருதகம். கிருதகம் என்றால் ஒருவரால் எழுதப்பட்டது. இவற்றை அபௌருஷேயம், பௌருஷேயமெனவும் கூறுவதுண்டு. அபௌருஷேயமான

வேதத்தை சப்தப்பிர்ஹ்மமெனவும் நூல்களிலெல்லாம் கூறப்பட்டிருக்கின்றது. ஆக இம் மூன்று பிரமாணங்களைக்கொண்டுதான் வேதாந்திகளான நாங்கள் ஒன்றை தீர்மானிப்பது.

வினு—மித்திரனே! தாம் நன்குபடித்தும், பகுத்தறிவை உடைத்தாயிருந்தும் ஒருவனுலும் செய்யப்படாது ஸநாதனமாய்த் தானகவே ஓர் எழுத்துக் கூட்டங்களாகிய சொற் கூட்டங்களடங்கிய பல வாக்கியங்கள் நிறைந்த ஓர் நூலானது வாக் என்ற இந்திரிய ஸஹாயமில்லாமலே இவ்வுலகில் ஒலித்துக்கொண்டிருந்தது, எனக்கூறுகின்றீரே, இது உம்மனச்சாக்ஷிக்குச் சரியாகக்தோன்றுகிறதா, நன்கு ஆலோசித்துப்பாரும். (அ) என்ற ஓர் எழுத்து ஒலிக்கவேண்டுமென்ருல் கண்டத்திலிருந்து வாய் வழியாக ஒலிக்கவேண்டும். சுத்தமா யொலிக்க வேண்டுமென்ருல் மூக்குத்துவாரங்களுமடைபடாம லிருக்கவேண்டும். இப்படி பிராணிகளிலும் மனிதஜாதி ஒன்றே இப்படி வியக்தமாயுச்சரிக்கக்கூடியது. ஆகையால் மனிதனென்ற புருஷனுலேயே செய்திருக்கும்படியான ஓர் வாக்கியத்திரளைத்தானுகவே உதித்தது, என்று அறிவாளர் எவராவது ஒப்புக்கொள்வார்களா, நன்கு விசாரித்து விடைகூறும்.

விடை—வேதாந்தி;—உலகாயதனே! இப்பொழுது நீர் சொல்வதெல்லாம் கூடி புருடனுலே செய்யப்பட்டிருக்கவேண்டுமென்பதும், ஆகையால் வேதமும் பௌருஷேயம்தானென்பதுமல்லவா. கண்டம் வாக்கு, நா, அண்ணம், மூவாய், நாசி, உதடுகள், பற்களிவைகளுடைய ஸஹாயத்தால் அ—முதல், ஹ—ஈருகவுள்ள எழுத்துகளெல்லாம் பிறக்குமே யொழிய, வெறு மிடத்தில் இப்படி யொரு சொற் கூட்டம் ஒலித் துதிக்காது என்பதால், பிரத்யக்ஷத்திற்கு நீர் சொன்னது பொருந்தவில்லை. சப்தமென்ற ஒலி எங்கிருந்து முண்டாகும். அவ்வொலி க—ங—ச—ஞ—ட—ண இப்படிப்பட்ட வேறு வேறுவிதமான பிரகாரத்தோடுகூடி உதிக்கவேண்டுமென்ருல், அங்கங்கு அந்தந்த எழுத்துதிக்கத்தக்க ஸாதகங்களேற்பட்டால் அவ்வவ் வொலி பேதமும் உதிக்கும். இது பிரத்தியக்ஷம். நியாயமிப்படியிருக்க ஒலிபேதங்களுக்கு மனிதன் வாக்கு மூக்கு, நா, மூவாய்களே வேண்டுமென்பது எப்படி அவசியமாகும். ஆகையால் பரவெளியினின்று வேதராசிகள் உதிக்கக்கூடும். ஆனதால் ஒரு புருடனது பிரயத்தினத்தாலேயே ஒலிபேதங்களுள்ள சொற்கூட்டமுண்டாகவேண்டுமென்ற நிர்ப்பந்தமில்லை. ஆனதால் வேதம் அபௌருஷேயமேயாகும்.

வினு- ஓ; வேதாந்தியே! என்னல் கேட்கப்பட்ட கேழ்விக்குச்சரியான சமாதானத்தை நீர் சொல்லவில்லை. என்ருலும் உம்மை நான் இப்

பொழுது சில விஷயங்களைப்பற்றி வினவுகின்றேன். அவைகளுக்கு மறு மொழிகூறும். அதாவது ; வேதாந்தமென்ற உபநிஷத்துகளாகிற ஊஷர பூமியிலும், சுத்தவெளியிலும் பிரமம் பிடித்த சிலர் வெகு பாடுபடுகிறார்கள். அவர்கள் யாவர் யாவரெனில் ; பாஸ்கராசாரியர், சங்கராசாரியர், யாதவப் பிரகாசர், இராமானுஜாசாரியர், ஆனந்த தீர்த்தரென்ற மத்துவாசாரியர், ஸ்ரீ தராசாரியர், சைதன்யாசாரியர், வல்லபாசாரியர், இராமாநந்தி, சுவே தாசாரியர், கபிலர், பதஞ்ஜலி, கௌதமர், கணாதர், புத்தர், ஜினர், க்ஷபணர் இவர்களெல்லாமென்றறி வீராக. இவருள் ஈற்றிலுள்ள மூன்று பெயர்கள் மாத்திரம் கேவலம் தமது புத்தியால் ஊஹத்தைகொண்டு உலகா திகளின் தத்துவத்தைப் பேசுகின்றவர். கபிலர் முதலிய நால்வர்களும் பிரமாணம் யுக்தி இரண்டையும் கலந்து பேசுகிறவர்கள். மற்ற எல்லோரும் வேதாந்தமாகும் உபநிடத நூலை ஆதாரமாகப் பற்றிக்கொண்டு தீர்மானிப் பவர். இவர்களுள் நீர் எந்த வகுப்பைச் சார்ந்து பேசுகிறவர் என்று முதலில் தமதுள்ளத்தைக்கூறும்.

விடை- நான் இராமானுஜமதத்தைச்சார்ந்த வேதாந்தியாவேன்.

வினா- அப்படியானால் உமக்கும் நமக்குமிப்பொழுது நடக்கும் விவாத த்திற்குச் சிலமத்தியஸ்தர்கள்வேண்டும். அவர்களை அழைத்துவாரும். அப் பொழுது விபரமாய்ப்பேசி தீர்மானிப்போம்.

விடை- வேதாந்தியாகிய எனக்கு என்னைப்போன்ற மற்ற வேதாந்தி கள் தான் மத்தியஸ்தர்களாய் வருவார்கள். அது உமக்கு ஸம்மதமா. பிறகு அவர்கள் வந்த பின் தகரார் சொல்லக்கூடாது.

உலகாயதன் ; எவராயிருந்தாலும் பாதகமில்லை. நான்கு அல்லது மூன்று வித்துவான்களைப்பார்த்து அழைத்து வாரும்.

வேதாந்தி ; (உடனே அங்குமிங்குமலைந்து மூன்று பெயர்களை அழை த்துவந்து) ஓ ! நண்பனே ! இதோ இவர் கோபால சாஸ்திரிகள் ஒன்று, இரண்டாவது பீமாசாரியார், மூன்றாவது ஞான ஸம்பந்த சிவாசாரியார். ஆக இம்மூவரும் வந்தார்கள். இம்மூவரையும் மத்தியஸ்தர்களாக வைத்துக் கொள்ளும். மேலே பேசும் பார்ப்போம்.

உலகாயதன் ஓ ! கோபால சாஸ்திரிகளே ! தாம் யாவர், எம்மதத்தி யவர், தம்மை எங்களிருவர்களுக்குள் நடக்கும் வியவஹாரத்திற்கு மத்தியஸ் தராக நானு மொத்துக்கொண்டேன். தமக்கு ஏதாவது ஆக்ஷேபமுண்டானால் சொல்லும்.

கோபால சாஸ்திரி ; அன்பனே ! நான் பிராம்மணன், சங்கரமதத்தை அபிமானித்து நடந்துவரும் சாங்கரன். உலகத்தில் ஸ்மார்த்தர் என்பார்கள். உங்களிருவர்களுடைய வியவஹாரத்தில் வியவஹாரம் முடியும் வரையில் மத்தியஸ்தனுயிருந்து யதார்த்தத்தை தீர்மானிக்க சித்தனுயிருக்கிறேன்.

உலகாயதன் ; ஓ ! பீமாசாரியரே ! நீர் யார், யாது மதத்தியவர். உமக்கும் மத்தியஸ்தமா யிருந்து பக்ஷமாதமில்லாமல் தீர்மானம் கூறுவதற்கு ஸம்மதமுண்டா ? கூறும்.

பீமாசாரி ; நான் விப்பிரன், ஆனந்த தீர்த்தாசாரியாருடைய துவைத மதத்தையனுஷ்டிப்பவன். மத்தியஸ்த விஷயத்தில் கோபால சாஸ்திரிகளைப்போல் தீர்மானம் சொல்ல யாதொருபக்ஷபாதமில்லாமல் சித்தனுயிருக்கிறேன்.

உலகாயதன் ; ஓ ! ஞான ஸம்பந்த சிவாசாரியரே ! நீரும் உம்முடைய ஜாதி. மத்தியஸ்தம், இவ்விஷயங்களுள் அவர்களைப்போலவே ஒத்துக்கொள்ளுகிறீரா ? உம்முடைய மதம்மாத்திரம் சைவமதம். அது சுவேதாசாரியரால் பிரதிஷ்டாபனம் செய்யப்பட்டது. நேரிட வேதவியாஸரால் கூறப்பட்ட பிர்மஸூத்திரத்தை ஆதாரமாக வுடையது. பிர்மஸூத்திரம் வேதாந்த வாக்கியங்களை ஆதாரமாகவுடையது. அவையெல்லாம் எனக்கும் நன்ருய் தெரியும். ஆகையால் ஸம்மதம் கூறும்.

ஞானஸம்பந்த சிவாசாரியர் ;—ஓ ! உலகாயதரே ! நீர்சொன்னதெல்லாம் உண்மையே. நான் சுத்த சைவன். பார்வைக்கு மாத்திரம் சாங்கரைப்போலிருப்பேனே யொழிய, வேதாந்த ஸித்தாந்தத்தில் உம்முடைய பிரதிவாதியான வேதாந்தியைப் போன்றவன். நானும் விசிஷ்டாத்வைதியே யொழிய அத்துவைதியல்ல. என்னுல் கூடியவரையில் உங்களுடைய வாதங்களை மனதில் வாங்கி பக்ஷபாதமில்லாமல் தீர்மானிக்கிறேன். மெய்யல்லாது பொய்யை உரைக்கமாட்டேன். **உலகாயதன்** ; ஓ ! வேதாந்தியே ! நீர் அழைத்துவந்த மூன்று பெயர்களும் எனக்கும் ஸம்மதந்தான். ஆகையால் நான் கேட்கும் வினுக்களுக்கு ஸரிவர உண்மையாய் விடைகொடும். அதாவது ;—நீர் இராமானுஜமதத்தைச் சேர்ந்தவர் என்று எற்கனவே மொழிந்தீர். அந்த மதமானது இரண்டு பெரிய பிரிவுகளையுடையது. அவற்றுள் நீர் எம்மதத்தியவர் ?

வேதாந்தி ;—இராமானுஜமதம் என்பது இராமானுஜாசாரியாரால் பிரதிஷ்டாபனம் செய்யப்பட்டதே யொழிய, புதிதா யவரா லேற்படுத்தப்பட்ட

தில்லே. அது வேதவியாஸர், போதாயனர், டங்கருஷி, திரமிடருஷி, குஹதேவர், பிர்மநந்தி, நாதமுனி, இராமமிசிராசாரியர், யாமுனுசாரியர் என்றவர்களா லேற்கனவே கையாடப் பட்டதேயாகும். இதை இராமானுஜாசாரியார் பிர்மஸூத்திரத்திற்கு பாஷியமாய் எழுதிவெளியிட்டார். அதனுல் இவர் ஸ்ரீபாஷியகாரர் ஆயினர். இந்த பாஷியத்திற்கு முக்கியமாய் போதாயனவிருத்திநூலே ஆதாரம். மற்றப்படிநியாயதத்துவம், ஸித்தித்திரயமென்ற நூல்களே முன்நூல்கள். இவ்வளவு அடிப்படையுள்ள இராமானுஜமதமானது, ஸ்ரீவிசிஷ்டாத்துவைத ஸித்தாந்தத்தை தீர்மானிக்கிறது. இந்த பாஷியத்தை யனுசரித்து நடப்பவன்யான். ஆகையால் நான் இராமானுஜ மதஸ்தனென வேதாந்தியென்றேன். வேறு பிரிவு இருக்கிறதாக எனக்கு தெரியவில்லே. ஏதோ 2-பிரிவுகளிருப்பதாகத் தாம் அபிப்பிராயப்படுகிறீர். அது எதெது? என எனக்கு விளங்கவில்லே. ஆகையால் மத்தியஸ்தரே மொழியக்கடவது.

உலகாயதன் ;—ஓ! கோபாலசாஸ்திரிகளே! நீராவது இராமானுஜ மதம் 2-விதமென அறிவீரா. அப்படி தெரிந்திருந்தால் நீர்கூறும்.

கோபாலசாஸ்திரி ;—ஆம். நானறிவேன். இராமானுஜ மதத்தில் இரண்டு பிரிவுகளுள. அவையாவன ; பிரமாணுதீன ராமானுஜமதம், ஐதிஹ்யாதீன ராமானுஜமதம் என்பன.

உலகாயதன் ;—சாஸ்திரிகளே! தாம் கூறியவை, இரண்டும் தெளிவாகவில்லே. ஆகையால் அவற்றை தெளிவாய்க்கூறும்.

கோபாலசாஸ்திரி—பிரமாணுதீனமாவது ; ஷை இராமானுஜாசாரியரால் செய்திருக்கப்பட்ட ஸ்ரீபாஷ்யம் முதல் நித்திய மீமுகவுள்ள புஸ்தகங்களேப்பிரமாணமாக கைக்கொள்வதுமல்லாமல், அவருக்கும் முன்னேரால் செய்திருக்கப்பட்ட புஸ்தகங்களேயும், அவைகளுக்காதாரமான சுருதி, ஸ்முருதி, இதிஹாஸம், புராணமென்ற இவைகளேயும் பிமாணமாக கைக்கொண்டு அனுஷ்டிக்கப்படும் மதமென்பது. ஐதிஹ்யாதீனமாவது ; சிற்சில கட்டுக்கதைகளே இராமானுஜனுக்குப் பிறகு பிறந்த தேர்ந்த ஸமஸ்கிருதபாஷாக் ஞானமில்லாதவர் எழுதிவைத்திருக்கிருர்கள். இக்கதைகளில் இராமானுஜன் ஏதேதோ வருணுசிரம தருமங்களுக்கு விபரீதமாக நடந்ததாகக் காண்கிறது. இக்கதைகளே முதலில் செய்தவர் பன்னிரண்டாயிரம் கிரந்தங்களடங்கியதான ஓர் புத்தகத்தைச் செய்தவர். இதன் பிறகு பின்னுமனேகர் சுமார் பதினுயிரம் கிரந்தம் வரையில் சிறிய

சிறிய புத்தகங்களாகச் செய்திருக்கிறார்கள். இவையெல்லாம் இவருக்கு முக்கியப்பிரமாணங்கள். இவற்றுள் முதலாவது ஆழ்வார் தமிழ் நூலாகிய திருவாய்மொழிக்கு வியாக்கியானமென்பார். மற்றவை குருபரம்பரை என்ற பற்பலவிதமான நூல்கள். கடைசியாக எழுதினது "ஸ்ரீ வைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷை" என்பது. மற்றுஞ்சில இரஹஸ்யவியாக்கியானங்கள். இவற்றுள் முதல் ஐதிஹ்யம், 24—ஆயிரம் கிரந்தங்களோடு கலந்து அந்தந்த ஸந்தர்ப்பங்களுக்குத் தக்கபடி சேர்க்கப்பட்டு 36—ஆயிரம் கிரந்தங்களடங்கியதாக விருக்கிறது. அது தமிழும், வடமொழியும் கூடின ஓர் பரசுராமபாஷையால் செய்யப்பட்டிருக்கிறது. மற்றவைகளுமப்படியே இருபாஷை கலந்த புத்தகங்களே. இதற்கு மணிப்பிரவாளமென அவர் கூறுவர். விகதான்ன பாஷை யென்றால் நன்றாயிருக்கும். ஆகக்கூடி ஸ்ரீ பாஷ்யம் முதலிய ஸம்ஸ்கிருத நூல்களெல்லாம் இவர்களுக்கு ஒட்டகத்திற்கு மாந்தளிர்போல் பிடியாதது. ஸாம்ஸ்கிருதமான இராமானுஜாதிகளால் செய்யப்பட்ட புஸ்தகங்களெல்லாம் அன்னியர்களுக்காகவும், குழந்தை புத்தியான இளமறிவார்களை ஏமாற்றுவதற்காகவும் செய்யப்பட்டன, என்பார்கள். இவர்களுக்கு ஐதிஹ்யங்களே இவ்வாறு பிரமாணமாயிருக்கினும், மற்ற பிரமாணுதீன மதஸ்தரான இராமனுஜீயர்கள்போல் உபநயனுதி ஸம்ஸ்காரங்களையும், சிராத்தாதிகளையும் சிரத்தையில்லாமல் செய்துகொண்டு, செய்வதுபோல் நடனம் செய்கிறார்கள். ஒவ்வொன்றையும் முடிவாய்ப் பார்தால் செய்தும் செய்யாதது போலவேமுடியும். இதைக்கண்டு பிடிப்பது அறிது. ஏனெனில்; போர்வைக்குள் கையாட்டுவதைப்போல் திரைச்சீலைமறவிலேயே இவர் காரியம் முழுவதும் நடைபெறும். ஆக இது தான் ஐதிஹ்யாதீன ராமானுஜ மதமாகிறது.

உலகாயதன்-சாஸ்திரிகளே தம்மாலிப்பொழுது கூறப்பட்ட 2-வதான ஐதிஹ்யாதீன ராமானுஜமதமென்பதின் முடிவென்ன?

கோபால சாஸ்திரி:—வியர்த்தபொழுது குளிக்கவேண்டியதும், பசித்தபொழுது உண்ணவேண்டியதும், மற்றும் வேண்டியதைச் செய்துகொண்டு பசுவைப்போல் திரியவேண்டியதும் தான் முடிவு. இவை அவர்களது இரகஸ்ய சாஸ்திரங்களில் தீர்மானிக்கப்பட்டவை.

உலகாயதன்—சாஸ்திரிகளே! மிகநன்று, மிகநன்று!! இப்படிப்பட்டவருண்டானல் இவர்களும் என்மதத்தியவரே ஆயினர். நம்மதமென்று உலகத்தில் ஓர் வகுப்பினர் எவருமில்லையே என மிகவும் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன். அது இன்றோடு தீர்ந்தது. ஆகையால் எனக்கு இவ்

வைதிஹ்யாதீன ராமானுஜீயரோடு வாதமில்லை. இவ்வேதாந்தியோடு தான் வாதம்.

கோபால சாஸ்திரி—ஆகையாற்றான் இவ்வேதாந்தியானவர் வேறோர் விபாகமிருப்பதாகக்கூட ஒப்புக்கொள்ளவில்லை. ஏனெனில்; ஒரு மதமானால் அப்படிப்பட்ட மதத்தைப் பிரதிஷ்டை செய்தவர் நூல்களைத் தழுவியிருக்க வேண்டும். மதாசாரியனே "பாஷ்யந்து பாரஞ்ஜனம்" என்று பிறர்களுக்காக பாஷியம் செய்திருப்பாரேயானால், ஸ்வமதத்திற்காக வேறோர் பிரமாண நூல்வேண்டும். அப்படிப்பட்ட நூலே இல்லாததால், தம் தங்களுக்கு வாய்க்கு வந்தவைகளைப் பேசிக்கொண்டிருப்பதும், அவைகளைப் புத்தகங்களாக எழுதி வைத்துக்கொள்வதும், அவைகளைப்பிரமாணமாகக்கொண்டு அனுஷ்டிப்பதும் மூலபுருஷன் மதமாகாதல்லவா. அப்படியாகுங்கால் இராமானுஜ மதத்தில் இராமானுஜீய நூல்கள்படி மதபேதம் சொல்வது கூடாததென நமது அன்பராகும் வேதாந்தியின் அபிப்பிராயம். ஆராய்ந்து பார்த்தால் அதிவாதங்களால் இராமானுஜ மதத்தைக் கண்டிப்பதாகவே முடிவில் தீர்மானிக்கவேண்டிவரும். ஆகையால் அவர்களை இராமானுஜீயரென்பதா? இராமானுஜமத விரோதிகளென்பதா? என்று ஆலோசித்துப் பாரும். இவை நிற்க; இனிதமது உலகாயத பூர்வபக்ஷங்களை தொடங்கும்.

உலகாயதன்;—பிரத்தியக்ஷம் தவிர, மற்றெதையும் நான் பிரமாணமாக ஒத்துக்கொள்வதில்லை. ஒரு சமயம் அனுமானத்தை பிரத்தியக்ஷத்திற்கு சாதகமாக ஒப்பினாலும், ஆகமமென்பதை அடியோடு ஒத்துக்கொள்வதேயில்லை. ஆகையால் என் வாதங்கள் வேதசாஸ்திர விருத்தங்களெனத் தாங்கள் நடுவில் ஆக்ஷேபிக்கக்கூடாது. நான் சொல்வதை யெல்லாம் தாங்கள் மனதில் வாங்கிக்கொண்டு, என்னைப்போலவே பிரத்தியக்ஷப் பிரமாணத்தைகொண்டே என்வாதங்களைக் கண்டிக்கவேண்டும். மறுபடி மேல் பூர்வபக்ஷம் செய்யவும்வேண்டும்.

வேதாந்தி—உலகாயதரே! தம்முடைய அபிப்பிராயப் படியே பிரத்யக்ஷமென்ற ஒரு பிரமாணத்தைக் கொண்டே வாதம் செய்யும். ஆனால் சிற்சில விஷயங்களுக்குப் பிரத்தியக்ஷப் பிரமாணம்போல் கலக்கம் வராத அனுமானப் பிரமாணமும் வேண்டிவரும். அதையும் நன்கு ஆலோசித்துப் பார்த்துக்கொண்டு முதன் முதலில் தேகத்தைக் காட்டிலும் ஆத்மா வேறல்ல என்ற உம்மதத்தைப்பற்றி சரியான ஆதாரங்களைப் பேசத்தொடங்கும்.

(இன்னும் தொடரும்)

கோயில் விஷயம்.

ஏற்கனவே 59-ம் பக்கத்தின் கடைசியில் முடித்த ஆதாரங்கள் பிரகாரம் ஸ்ரீ ரங்கநாராயணஜீயர் ஸ்தானத்திற்கு வைதிககாரியாதி பத்தியமில்லையென முடிந்தவுடன், மேலுமது ஸன்யாஸிஸ்தானமாதலால் இலௌகிக காரியாதிபத்திய முண்டாவதற்கும் காரணமேயில்லையென நன்கு காண்கிறது. இதைப்பற்றிய ஆதாரங்களும், மற்ற மரியாதை வருமான கைங்கரியங்களின் விபரங்களும் பிற்பாடு கூறப்படும்.

ஸ்ரீ ரங்கம் கோயில் ஒழுகு.

(பவித்ரோத்ஸவம்.)

இந்த ஸ்ரீ ரங்கம் தேவஸ்தானத்தில் ஒவ்வொரு வருஷத்திலும் ஆடிமீ முதல் மறுவருஷம் ஆனிமீ வரையில் ஆக-12 மாதங்களிலும் ஒவ்வோர் உத்ஸவங்கள் நடக்கின்றமையால், அவைகளுள் நாளது ஆவணி-மீல் நடந்த பவித்ரோத்ஸவத்தைப்பற்றி முன்னே சுருக்கமாகக் காண்பித்திருக்கிறோம். அந்த பவித்ரோத்ஸவத்தை சாஸ்திரப்படி விசதமாக மேல் எழுதுகிறோம். இதைப்போல் அந்தந்தமீல் நடக்கும் உத்ஸவங்களுக்கும் அந்தந்தமீ ஸஞ்சிகையில் விசதமாய் எழுதலாகும்.

பவித்ரோத்ஸவமாவது-பரிசுத்த விசேஷத்தை காப்பாற்றும் உத்ஸவமென்பது. இப்பொருள், (ப—வி—த்ரம்) என்ற மூன்றெழுத்துகளினின்றுண்டானது. இது, ஸ்ரீபாஞ்சராத்திர சாஸ்திரத்தில் காணப்படும். மேலும்—இது எவை எவைகட்குப் பிராயச்சித்தமென்றால்; நித்தியப்படி, விசேஷப்படிகளில் நடக்கும் திருவாராதனங்களிலும், பிரதிமீங்களில் உத்ஸவங்களிலும், மந்திரம், திரவியம், கிரியை இவைகளுக்கு உலோபமேற்படக்கூடுமாகையால், அவைகளுக்காக பிராயச்சித்த ரூபமானது. இவற்றுள் மந்திரலோபம் வந்திருந்தால், ஆசாரியர்களுக்கு தோஷமேற்படும். திரவியலோபம் வந்திருந்தால் ஷை தேவஸ்தான தருமங்களை கவனித்து எஜமான ஸ்தானத்திலிருந்து நடத்தும் அதிகாரிக்கு தோஷம் வரும். கிரியைக்கு லோபம் வந்திருந்தால் மாந்திரிகமானால் ஆசாரியனுக்கும், தாந்திரிகமானால் எஜமானருக்கும் தோஷம். ஆகக்கூடி தருமம், தருமகர்த்தா, ஆசாரியன் இராஜ்யத்திலுள்ள பிரஜைகள், இராஜா இவர்களுடைய க்ஷேமத்திற்காகவே இப்பவித்ரோத்ஸவம் செய்யப்படுகிறதெனத் தெளிவாயிற்று.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்

சாந்திரமானப்படி 1-வூக்கு நாள் 360 ஆகையால் 360 திருவாராதனங்கள் நடத்தப்படவேண்டும். அதற்காக ஆகம சாஸ்திரங்களில் கர்ப்பக்கிரஹத்திற்கு வெளியில் 3-வது ஆவரணத்திற்குள்ளாவது, 3-வது ஆவரணத்திலாவது ஸரியான வேர் ஸ்தானத்தை தாற்காலிகமாயாவது, சாசுவதமாயாவது சிற்பிகளைக்கொண்டு கட்டிவைத்து, அந்த ஸ்தானத்திற்கும் புண்யாஹவாசனாதிகளால் பரிசுத்தம்வருத்தி, அதன்மேல், அவ்விடத்தில் உத்ஸவமூர்த்தியை எழுந்தருளப்பண்ணி ஆராதனாதிகள் செய்யப்படவேண்டும்.

மிருத்ஸங்கிரஹணம்

அங்குரார்ப்பணம். (திருமுளை.)

இவவுத்ஸவத்திற்குப் பூர்வாங்கமாக முதலில் அங்குரார்ப்பணம் செய்யவேண்டியது. இவ்வங்குரார்ப்பணம் என்ற சொல்லிற்கு தமிழில் " திருமுளை " என்று பெயர். இதன் விபரமாவது—ஷை உத்ஸவாரம்ப தினத்திற்கு முந்தியநாள் பெரியவஸரத்திற்குப்பிறகு, குறிப்பிட்ட நல்ல வேளையில், அதிகப்படி க்ஷீரான்னமென்று பெயருள்ள தளிகையை பெரிய ஸன்னிதிக்குள் கொண்டு போய்ச் சேர்க்கிறது. பிறகு கொரட்டு மணியகாரர், தேவஸ்தானம் மனிதரான ஸன்னிதி வாசல் சேவகம் பார்க்கிறவரை உத்ஸவாசார்யகம் பண்ணப்பொகிற அர்ச்சகரை அழைத்துவரும்படி அனுப்புகிறது. ஷையாரும் உடன் உத்ஸவாசாரியரான அர்ச்சகரை நல்லவேளையில் சகுனம் பார்த்து அவரகத்திலிருந்து அலங்கார யுக்தராய் புறப்படச்செய்து, வழிவிலக்கி சந்திரபுஷ்கரிணியில் ஷை ஆசாரியர் பாதப்பிரக்ஷளனாசமனாதிகளைச்செய்து கொண்டுவர, அவரை பெரிய கோயிலுக்குள் அழைத்துப்போகிறது. பின்பு ஷை ஆசாரியரான அர்ச்சகர் தம்மால் நியமிக்கப்பட்ட பரிசாரகர்களால் வேண்டிய ஸாமான்களைத் தயாரித்து ஜாக்கிரதையாயிருக்கிற யாகசாலையில் ஹோமகுண்டத்தினருகில் போடப்பட்டிருக்கும் கூர்மாஸனத்தில் கிழக்கு முகமாக வீற்றிருப்பது. பிறகு கோவில் புரோஹிதரான ஸ்ரீபட்டரய்யங்காருடைய குமாஸ்தாவான உபாத்தியாயர் வந்தவுடன் ஷை ஆசாரியர் புரோஹிதர் இருவரும் ஷை ஸன்னிதிவாசல் சேவகரால் சகுனத்துடன் வழிவிலக்கப் பட்டவுடன் யாகசாலையிலிருந்து புறப்பட்டுப்பிரதக்ஷிணமாய் சேனை முதலியார் என்ற ஸ்ரீவிஷ்வக்ஸேனர் ஸன்னிதிக்குப் போகிறது. அங்கு ஷை ஆசாரியரால் ஷை விஷ்வக்ஸேனருக்கும் ஷை ஸன்னிதியில் மற்றுமுள்ள ஹனுமார், விபீஷணர்களுக்கும்

திருவாராதனம் நடத்தப்படும். உடன் 2 தேங்காய்களை ஷெ அர்ச்சகரே தமது கையாலுடைத்து, ஷெ திருநாமங்களுக்கு நிவேதனம்செய்து, பிறகு தளிகை ஸமர்ப்பிக்கப்பட்ட அந்த தேங்காய் மூடிகளுள் 2 மூடிகளை ஆசாரியர் எடுத்துக்கொண்டு மற்றிரண்டு மூடிகளையும் உபாத்தியாயருக்கு கொடுத்துவிடுகிறது.

இவ்விதம் நடத்தியபின் ;—அவ்விடத்தை விட்டுப் பிரதக்ஷிணமாய் புறப்பட்டு கீழப்படிவழியாக சந்தனுமண்டபத்தில் ஜயவிஜயர் வாசல் வழியாக பெரிய ஸன்னதிக்குள் சென்று, திருவாராதனத்திற்கு வேண்டிய ஸாமான்களெல்லாம் ஸஜ்ஜமாயிருக்கின்றனவா, என்று பார்த்துக்கொண்டு, அவ்விடத்திலும் முதலில் சேனை முதலியார் ஸன்னிதியிற்போல் 2-தேங்காய்களை உடைத்துப் பெரியபெருமாள் தொடங்கி ஸகலபேரங்களுக்கும் கண்டருளப்பண்ணி ஷெ தேங்காய்களிரண்டில் ஒன்றை அன்றைய தினம் முறை அர்ச்சகருக்கும், மற்றொன்றை உபாத்தியாயருக்கும் ஷெ உத்ஸவாசாரியர் விநியோகித்து விடுகிறது.

பிறகு திருவாராதனத்திற்காக அன்றுமுறை அர்ச்சகரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பரிசாரகரை திருமணி ஸேவிக்கும்படி நியமிக்கிறது. அந்தப்படி நியமனம் பெற்ற பரிசாரகர் திருமணிஸேவை தொடங்கினவுடன், திருமஞ்ஜன ஊழியக்காரரான ஸ்ரீ வைஷ்ணவரைக்கொண்டு கலசப்பானையென்ற பிரதான கலசத்தில் நிரம்ப தீர்த்தம் வாங்கி ஆராதனத்திற்காக ஏற்பட்ட பஞ்சபாத்திரங்களாகிற வட்டில்களில் ஷெ ஆசாரியன் தீர்த்தம் பூரிக்கிறது. பிறகு உபாத்தியாயரிடம் பவித்திரத்தை வாங்கி ஆசாரியன் அணிந்து கொள்ளுகிறது. உடனே ஸ்தானசுத்தி தொடங்கி காசுத்தி, பிராணாயாமம், பூதசுத்தி, அங்கன்யாஸ கரன்யாஸங்கள், மானஸயாகம் வரையில் முடித்துக்கொண்டு, பிரகாசமாக திருவாராதனத்தை ஆரம்பிக்கிறது. அப்பொழுது பரிசாரகர், திருமணி ஸேவையையும், தூபகாலங்களில் திருப்புகையை அர்ச்சகர் கையில் கொடுத்து வாங்க வேண்டியதையும் செய்ய வேண்டியது. திருமஞ்ஜன ஊழியக்காரர் வேண்டிய தீர்த்தத்தை கொடுக்க வேண்டியது. திருப்பதியார் ஊழியக்காரர் திருவிளக்கு நன்றாக்கி தீபக்காலில் எடுத்துக்கொடுக்கவேண்டியது. இந்த ஆராதனாதிப் பிரகாரணங்களில் அர்ச்சகர்களுக்கு இதரர்களின் அன்வாரம்ப ஸம்பந்தம் சாஸ்திரவிஹிதமாவதால் சாஸ்திரப்படி அது தோஷமாகாது. இப்பிரகாரம் திருவாராதனம் முடிந்தபிறகு, ஏகாந்தத்தில் பரிசாரகர் எடுத்துக்கொடுக்கும் ஸரம், மாலை முதலியவைகளைச்சாற்றுகிறது. இங்கு பெருமாளுக்கு ஸரமும் வெள்ளை மாலையும்தான். இவைகளைச்சாற்றுவது முறை அர்ச்சகர்

காரியம். இதற்கு முன்பே சேனை முதலியார் ஸன்னிதியில் ஸஜ்ஜப்படு த்தி வைத்திருக்கிற தோளுக்கினியான் 2-களிலும் சேனை முதலியாரையும், ஹனுமாரையும் தனித்தனியாக எழுந்தருளப்பண்ணி மாலை முதலிய அலங் காரங்களெல்லாம் முறைபார்க்கும்அர்ச்சகரால் செய்துவைக்கப்படும். இங்கு பெருமாளின் நித்தியப்படி புறப்பாட்டு மாலை சேனை முதலியாருடையது. இவைகளானபிறகு ஆசாரியகம் வஹிக்கிற அர்ச்சகரால் பெருமாளுக்குத் தளிகை அமுது செய்விக்கப்படவேண்டும். ஷ சுற்றுக்கோவிலில் தளிகை அமுது செய்வித்தல் முறைபார்க்குமர்ச்சகரைச்சேர்ந்தது. இதன் பிறகு ஸ்ரீபாஞ்சராத்திர சாஸ்திரப்படி ஷ உத்ஸவாசாரியர் அங்குரார்ப் பணத்திற்காக தேவஸ்தானம் திட்டத்திலேற்பட்டு அவர் கொடுத்த உஷ் ணீஷம் என்ற சிம்புக்குல்லாவையும், உபவீதமான உத்தரீயப்பட்டையும் அந்தந்த அங்கங்களில் அலங்காரம் செய்துகொள்ளவேண்டியது. உடனே பரிசாரகரால் பகவானுடைய ஸமீபத்திற் போடப்பட்ட கூர்மாஸனத்தில் உத்ஸவாசாரியர் பெருமாளுக்குப் பக்கத்தில் கிழக்குமுகமாய் உட்கார்ந்து கொண்டு பிராணயாமம் தொடங்கி ஸங்கல்பித்துக்கொண்டு பீஜசுத்திக் காக புண்யாஹவாசனம் செய்தும், பீஜங்களை (நவதானியங்களை) புரோ க்ஷணம் செய்தும், பூஜித்தும் அதை பெரியபெருமாள் முதல் எல்லோர்க் கும் கண்டருளப்பண்ணுகிறது. ஷ நவதானியத்தட்டானது ஷ முறை அர்ச்சகரால் எடுத்து ஸமர்ப்பிவிக்கப்படும்.

மரியாதைகள்,

இதனுடன் கோரட்டு மணியகாரர் மேலப்படிக்குக் கீழில் வாத்தியகாரர்களைக்கொண்டு நட்டுமுட்டு வாத்தியங்களைச் சேவிக் கச்செய்து, ஷ வாத்ய பூர்வகமாக உத்ஸவாசாரியருக்கு ஸேவை மரியாதைகள் நடந்தும்படி செய்கிறது. முறைககார அர்ச்சகர் அப்படியே உத்ஸவாசாரியருக்கு முதலில் 3-தடைவகள் தீர்த்த மும், பிறகு உபாத்தியாயருக்கு ஒரு தடவை தீர்த்தமும், ஸன்னிதி பரிசாரகர்களாயும், உத்ஸவாசாரியருக்கு ஸன்னிதிப் பெயர்களாயு முள்ள மற்ற இருவர்களுக்கும் ஒவ்வொரு தடவை தீர்த்தமும் களைசலும் ஸாதிக்கிறது. பிறகு ஆசாரியனுக்கு பெருமாளுடைய பெரிய வஸ்ரமாலையுடன் புதிய தொன்றைக்கூட்டி ஓர் அபயஹஸ் தமும் சாற்றிஸாதித்து, பஞ்சமுத்திரையோடு ஸ்ரீ சடகோபமும் ஸாதிக்கிறது. இக்களைசல் அபயஹஸ்தங்களுக்கு சந்தணம் தனி திட்டத்தில் ஏற்பட்டிருக்கிறது. பிறகு உபாத்தியாயருக்கு ஒரு

மாலை ஸாதித்து விட்டு பரிசாரகர்களுள்பட 3, பெயர்களுக்கும் ஸ்ரீ சடகோபம் சிரஸில் மட்டும் ஸாதிக்கிறது. ஷை யார்களின் ஸேவைக்காக ஏற்பட்ட புதிய மாலைகள் 3-ம் பெருமாளுக்குச் சாற்றிவரும் க்ஷீரான்னம் மாலை ஸாத்தோடு வாவழைத்துப் பெருமாளுக்குச் சாற்றிக்களைந்து, ஸிம்மாஸனத்தில் வைத்துக்கொண்டு, மேலே கண்டபடி முறை அர்ச்சகர் வினியோகப்படுத்திவருவது வழக்கமாயிருக்க, தற்காலமுள்ள வியவஹாரங்களால் ஷை பெரிய ஸாம்மாலையைமட்டும் அர்ச்சகருக்கு ஸாதிக்கக்கூடாதென்று தடைப்படுத்தப்பட்டிருக்கிறது.

இந்த ஆசாரியாலங்காரமானது பகவானுடைய உத்ஸவ காரிய பூர்த்திக்காகவும், பகவானுடைய திருவுள்ள உகப்பிற்காகவும் ஏற்படுத்தப்பட்டிருப்பதால், இவ்விதம் மதவைஷம்யத்தைப் பாராட்டிக்கொண்டு அசூயையால் தடைப்படுத்துவது பகவானுக்கு உகப்பாகாது.

இவ்விதம் ஸேவை, பூர்த்தியான பிறகு ஷை நவதான்ய பாத்திரத்தையும், மிருத்துக்காகமற்றோர் பாத்திரத்தையும் ஓர் பரிசாரகரும், வராஹநயினர் என்ற கனித்திரத்தை (மண் வெட்டியை) மற்றோர் பரிசாரகருமாக எடுத்துக்கொள்ளுகிறது. உபாத்தியாயர் மாத்திரம் தமது மாலையைத்தமது சிரத்தில் கட்டிக்கொள்வார். இதன் பிறகு ஷை ஆசாரியர் உத்ஸவத்தின் பொருட்டு அங்குரார்ப்பணம் செய்யவேண்டியதற்காக, மூலவர்-உத்ஸவரிவர்கள் முன்பாக ஸம்ஸ்கிருத பாஷையால் சுலோகரூபமாய் விக்ஞாபனம்செய்து நியமனம் பெற்றுக்கொண்டு, பகவானுக்கு அபிமுகராகவே அஞ்ஜலிஹஸ்தராய் ஷை உபாத்தியாயர் வகைராக்களுடன் காயத்ரீமண்டபத்தைப் பிரதக்ஷிணமாக ஜப விஜயர்வாசலில் வர, ஸன்னிதி வாசல் சேவகருப், கோவில் மஹாஜனம் என்ற பட்டையடித்துக் கூட்டம் விலக்குபவரும் மேலப்படியில் வழி விலக்க அவ்விடம வந்து. அது முதலாக இரட்டையான கால்பந்தம், ஷை கட்டுமுட்டு வகைரு இவைகளுடன் பிரதக்ஷிணமாகசேனை முதலியாருக்கு முன்புள்ள நாற்கால் மண்டபத்தில் வந்து மேற்கு முகமாக நிற்கிறது.

பிறகு புறப்பாடு ஸேவித்து சேனை முதலியாரும், அனுமாரும் புறப்படுகிறது. இவர்களை எழுந்தருளப்பண்ண வேண்டிய

காரியம் சாத்தாத வைஷ்ணவர்களுடையது. பிறகு உத்ஸவாசாரியர் வகைராக்களை முன்னிட்டுக்கொண்டு சேனை முதலியாரும், அனுமாரும் புறப்பட்டு கொட்டாரப் பிரதக்ஷிணமார்க்கமாக மிருத்ஸங்கிரகணத்தைவேண்டி முன்னால் மேளவாத்தியங்களுடனும் பின்னால் வேதபாராயண கோஷ்டிகளுடனுமாக ஸ்ரீரங்கநாச்சியார் ஸன்னிதியின் ஆரியபடர் வாசலுக்குவருவது. அது ஸமயம் ஷை தாயார் ஸன்னிதியில் தோசைத்திருப்பணியாரம் முதலியன நிவேதனமாகித்திருக்காப்பு நீக்குவது. இந்த நிவேதனத்திற்கு முன்பு ஸரம்மாலை நாச்சியாருக்குச்சாற்றுங்காலத்தில், ஷை கோவிலில் ஸேவைக்காக எற்பட்டிருக்கிற அதிகப்படி மாலைகளையும் நாச்சியாருக்குச்சாற்றிக்களைந்து ஸிம்மாஸனத்தில் வைத்திருக்கவேண்டும். உடனே உத்ஸவாசாரியனை முன்னிட்டுக்கொண்டு சேனை முதலியாரும், அனுமாரும் நாச்சியாரைப்பிரதக்ஷிணமாக வந்து ஸன்னிதி முன் மண்டபத்தில், ஒருவருக்கொருவர் அபிமுகமாக தென்வடபார்சுவங்களில் எழுந்தருளப்பண்ணிவைக்கிறது. உத்ஸவாசாரியர் முதலியவர்கள் மாத்திரம், பிரதக்ஷிணமாக வரும்பொழுதே தாயார் ஸன்னிதி முன் மண்டபத்திற்கு வருவதற்காக வடபாகத்திலுள்ள வாசற்படியினருகில் ஷை ஆசாரியன் மாத்திரம் நிற்பார். அன்று தாயார் ஸன்னிதியில் முறை பார்க்கும் பண்டாரியானவர், 1233-ம் பசலி திட்டக்கணக்கில் "ஊழியம் பரிசாரகம் வகைரு வேலை செய்கிற பண்டாரி" என்று கண்டிருக்கிறபடி அந்த நாச்சியார் ஸன்னிதி பரிசாரககைங்கரிய கிரமத்தில் சர்க்காரில் எற்பட்டிருக்கிற பாத்திரத்தை எற்கனவே வாங்கி வைத்திருந்து, அதில் நிரம்ப தீர்த்தம் கொண்டு வந்து ஷை உத்ஸவாசாரியருக்கு அவரது பாதத்தில் பிரக்ஷாளனார்த்தமாகச் சேர்க்கிறது. பிறகு கூடவே வந்த, 2-காப்பந்தங்கள் ஸஹிதமாய் ஸன்னிதி வாசல் வரையில் போய், காப்பந்தங்களை நிறுத்திவிட்டு ஷை அர்ச்சகர் முதலியவர்கள் ஷை நாச்சியார் ஸன்னிதிக்குள் செல்லுகிறது. அப்படி உள்ளில் சென்று அந்த பண்டாரியால் எற்கனவே சேகரம் செய்து வைக்கப்பட்ட பதார்த்தங்களுள் ஒன்றான 2. தேங்காய்களை ஷை ஆசாரியர் வாங்கி உடைந்து வட்டிலில் சேர்ந்து தாயாருக்கு நிவேதனம் செய்து 2-மூடிகளை ஷை ஸன்னிதி முறை அர்ச்சகருக்கும், பாக்கி 2-மூடிகளை

உபாத்தியாயருக்குமாக விநியோகித்து விடுகிறது. பிறகு பெரிய ஸன்னிதிபோல் திருவாராதனத்திற்கு திருமணி ஸேவிக்கும்படி உத்ஸவாசாரியர் நியமிக்க, அப்படியே பண்டாரியும் பரிசாரகக்கிரமத்தில் திருமணி ஸேவிக்க தூபதீபவகைராக்களுடன் திருவாராதனத்தைப் பூர்த்திசெய்கிறது. ஷை ஆராதனத்தின் பூர்த்தியில், கூடவந்த பரிசாரகரால் வைக்கப்பட்டிருக்கிற நவதான்யத்தை, ஷை ஸன்னிதி முறை அர்ச்சகரெடுத்துக்கொடுக்க, அதை உத்ஸவாசாரியர் வாங்கி தாயாரும் கடாக்ஷித்தருளும்படி செய்து, மறுபடியும் ஷை முறை அர்ச்சகரிடமே திருப்பிக்கொடுத்து விடுகிறது. இவ்விதமான பிறகு முறை அர்ச்சகர், ஷை உத்ஸவாசாரியர் வகைரு நால்வர்களுக்கும் பெரியகோவிலிற்போல்தீர்த்தம் ஸாதித்துவிட்டு. தீர்த்த வட்டில் உத்தரிணிகளை தாமே எடுத்துக்கொண்டு வெளியில் போய் தோசைத்திருப்பணியாரம் வகைராவை சேனைமுதலியாருக்கும், அனுமாருக்கும் நிவேதனம் செய்துவிட்டு வருகிறது. இதற்குள்ளாக பண்டாரி, உத்ஸவாசாரியர் வகைருக்களுக்கு சந்தனக்கரைசல் ஸாதிக்கிறது. சாற்றிக்களைந்து வைக்கப்பட்டிருக்கிற ஸேவை மாலைகளில் மூன்றில் ஒன்றுடன் பெரிய வஸரம் மாலை ஒன்றைச் சேர்த்து ஷை உத்ஸவாசாரியருக்கு, முறை அர்ச்சகர் சாதிக்கிறதுடன் பஞ்சமுத்திரையாக ஸ்ரீ சடகோபத்தையும் முறை அர்ச்சகரே எடுத்து ஸாதிக்கிறது. உபாத்தியாயருக்கு ஒரு மாலை, ஏகமுக்திரை ஆக இப்படி தீர்த்தம்மாலை ஸ்ரீ சடகோபம் மூன்றுகளையும் முறை அர்ச்சகரே எல்லோர்க்கும் நேரில் சாதிக்க வேண்டியது.

இவ்விதம் நாச்சியாரை ஸேவித்துவிட்டு, மரியாதைகளையும் பெற்றுக்கொண்டு, பெரிய ஸன்னிதியில்போல் வெளிப் புறப்பட்டு கோவில் மஹாஜனம் வழி விலக்க இரட்டைக்காப்பந்தங்களுடன் தென்புறம் வாசற்படி வழியாக இறங்கி தாயார் ஸன்னிதியைப் பிரதக்ஷிணமாக வந்து, வில்வவிருக்ஷத்தின் ஸமீபத்தில்வர, அங்கு பண்டாரியாகிய தாத்காலிக பரிசாரகரால் போடப்பட்டிருக்கிற கூர்மாஸனத்தில் உத்ஸவாசாரியர் வீற்றிருக்கிறது. நவதான்யத்தையும், கனித்ரத்தையும் அங்கே கீழேவைக்கிறது. பிறகு ஆசாரியன் பிராணாயாமம் தொடங்கி, ஸங்கல்பித்துக்கொண்டு பூமி சுத்திக்கா

கவும், கனித்திர சுத்திக்காகவும் முதலில் புண்யாஹவாசனம் செய்து, அதனுடன் பூமி பூஜையையும், கனித்திர பூஜையையும் செய்கிறது. அப்பொழுதும் ஷை ஆசாரியன் 2 தேங்காய்களை வரிசையாக அந்தந்த பூஜையானவுடன் அந்தந்த தேவதைக்கு உடைத்து நிவேதனம் செய்து முதலில் உள்ளதைதானும், பிறகுள்ளதை உபாத்தியாயருக்குமாகக்கொடுத்து விடுகிறது. அதன் பிறகு ஷை ஆசாரியனும், உபாத்தியாயரும் பூஸூக்தமென்ற வேதத்தை ஓதுகிறது. பிறகு ஷை ஆசாரியன் ஷை கனிதகிரத்தை எடுத்து மூன்று தரம் பூமியில் வெட்டி எடுத்தமண்ணை அவர் பரிசாரகர் வெள்ளித்தட்டில் வாங்குகிறது. அந்த பூமியில் உடனே ஷை ஆசாரியன் யவாதிதானியத்தை தெளித்துவிட்டு, மறுபடியும் கூர்மாஸனத்தில் உட்கார்ந்து விடுகிறது.

இப்படி இங்கே மிருத்ஸங்கிரஹணம் செய்து வைத்திருக்க அதனுடன் தாயார் ஸன்னிதி உள்ளில் ஸ்தானிகர்களுக்கும், பிறகு சாத்தாதவைஷ்ணவர்களுக்கும் சேவை மரியாதைகள் நடத்துகிறது. இதில் தீர்த்தம், மாலை, ஸ்ரீ சடாரி ஸாதிக்கவேண்டியது ஷை ஸன்னிதி முறை அர்ச்சகர். மற்றக்காரியம் செய்து வைக்க வேண்டியது பண்டாரி. ஸ்தானிகர்களுக்கு மட்டும் பஞ்சமுத்திரை சடகோபம். சாத்தாதவருக்கு தலைக்கு மட்டும் சடகோபம். இவ்விதம் ஸேவையான பிறகு, வில்வ விருக்ஷத்தினருகில் தோசைப் பாவாடை வினியோகம். அர்ச்சகர் தொடங்கி அருளிப்பாடு செய்தவுடன் முறை அர்ச்சகர்போய் தனதையும், உத்ஸவாசாரியருடையதையும் பெற்றுக்கொண்டு வந்து உத்ஸவாசாரிடம், அவருடைய வினியோகத்தைக்கொடுத்து விடுகிறது. மற்றொன்றைத்தானெடுத்துகொள்ளுகிறது. இந்தப் பிரகாணங்களில் தூபம, தீபம், திருமணி முதலியவைகளை எடுத்துக்கொடுக்கவேண்டியதும், ஸேவிக்கவேண்டியதும் நாச்சியார் கோவில் பண்டாரியை ச்சேர்ந்வை.

“ இங்கு கூர்மாஸனம் போடுவதை மாத்திரம் பண்டாரிகள் சிலகாலமாய்ப் போடாமல் ஆக்ஷேபணை செய்து வருகிறார்கள். ஆனதால் வேறு மனுஷியனைக்கொண்டு ஸர்க்காரால் போடப்பட்டு வருகிறது. இது விஷயமான நடவடிக்கை தேவஸ்தானம் கச்சேரியில் இன்னும் தீரவில்லை. பேபர் பெண்டிங்கிலிருக்கிறது. இது

வும் வகுப்பு வைஷம்யத்தால் கவனிக்கப்படாமலிருக்கிறதுபோல் தோன்றுகிறது". இங்கே ஒரு விஸ்மயம்—அர்ச்சகர் கால்களில் அலம்புவதற்காக பாத்திரதோடு ஜலத்தை விடுகிறவர்களுக்கு, கூர்மாஸனம் போடுவதுதானு மரியாதைக் குறைவாயிற்றென்பது. முன் எப்படி பெருமாளென்றே செய்தார்களோ, அப்படியே பிறகும் பெருமாளென்று நினைத்தால் யாதுகுற்றம். இது வீணான சண்டி வழக்கேயொழிய வேறில்லை. பாதிகரிக்கும், பாதிவிதைக்கு,மென்பது போலிருக்கிறது. பண்டாரி ஒருவருக்கே அந்த ஸமயம் பரிசாரக பாத்தியமும் வருவதால், பரிசாரகர் செய்யும் மற்றெல்லாக்காரியம்போல் கூர்மாஸனம் போடவேண்டாமா. இதற்கு மாத்திரம் பரிசாரக பாத்தியம் விலகி நிற்குமோ. இப்படி பிடிக்கிப்பிடி மரியாதையும், வருமானமும், ஆக்ஷேபங்களுமிருப்பதாலேயே, மிருத்ஸங்கிரஹணத்தையும் இவ்வளவு விஸ்தாரமாய் கூறவேண்டி வந்தது. நல்ல வகுப்பினருங்கூட சில விடங்களில் சோம்பலால் குற்றங்கூறுவார்கள். இவ்விஸ்தாரத்தால் எதிர் காலங்களில் அனேகம் குணங்கள் பயன்படக்கூடும். ஆனதுபற்றி எவரும் சோம்பலை உதறிவிட்டு முழுமையும் படித்துப்பார்ப்பீராக.

புண்யாஹவாசனம் தொடங்கும் காலங்களிலெல்லாம் ஷெடி ஆசாரியருடன் உபாத்தியாயரும், ஸங்கல்பம், ஜபமந்திர மிவைகளைக்கூறுவது மோதுவதும் வழக்கம். இக்காலங்களில் ஆசாரியர் மற்றுமங்குள்ள அர்ச்சகர்களுக்கும் தர்ப்பம் கொடுத்தும் வேதமோதுவதும் வழக்கம். ஆசாரியரே முழுவேத மந்திரமோதாமல் சோம்பல் படுகிறார். புண்யாமஹவாசனம எப்படி ஸித்திக்கும்?

இவ்விதம் பாவாடை வினிபோகமான பிறகு சேனை முதலியாரும், அனுமாரும் தாயார் ஸன்னிதிக்கு எழுந்தருளின விமரிசைப்பிரகாரம், உத்ஸவாசாரியர் வகையறுக்களுடன் புறப்பட்டு மணல்வெளிப்பிரதக்ஷிணமாக பெரிய கோவிலுக்குள் சென்று ஆசாரியர் வகையறு யாகசாலைக்கும், சேனை முதலியாரும், அனுமாரும் அவர்கள் ஸன்னிதிக்கும் எழுந்தருளுகிறது.

பிறகு பெரிய ஸன்னிதி முறை அர்ச்சகர், சேனை முதலியார் மாலையைக்களைந்து கொரட்டு மணியக்காரருக்கு ஸாதித்தனுப்

பிவிட்டு, ஷை 2 திருநாமங்களையும் ஸன்னிதிக்குள் எழுந்தருளப் பண்ணுகிறது.

யாகசாலைக்காரியம்.

பிறகுயாக சாலையில், முதலில் சாலாசுத்திக்காக ஆசாரியர், உபாத்தியாயரால் ஸங்கல்பம் சொல்லுவிக்கப்பட்டு புண்யாஹவாசனம் செய்து சாலையைப்புரோக்ஷணம் செய்து சுத்தமாக்கிக்கொள்ளுகிறது. பின்பு ஷை அர்ச்சகர் அங்குரார்ப்பணத்திற்காக ஹோமம் செய்து ஸம்பாதம் கிரஹித்து, ஸோம கும்பஸ்தாபனம், பூஜை பீஜபூஜை, பாலிகா பூஜை இவைகளைச் செய்து ஷை ஸம்பாதததை ஷை நவதானிய பீஜங்களில் சேர்க்கிறது. உடன் பாலிகைகளில் ஷை பீஜங்களை, அங்கு ரோற்பத்திக்காக அர்ப்பணம செய்கிறது முதலில் நடத்தும் யாகசாலைப்புண்யாஹவாசனத்திற்கு ஷை ஆசாரியர் 2-தேங்காய்களை உடைத்து நிவேதனம் செய்து, 2-மூடிகளைத் தானும், பாக்கி 2-களை உபாத்தியாயருக்கும் கொடுத்து விடுகிறது.

பிறகு ஷை யாக சாலைக்கேற்பட்ட பிரஸாதத்தைக்கொண்டு வரச்செய்து, ஷை ஸோம கும்பாதிகளுக்கு நிவேதனம் செய்து விட்டு, அப்பிரஸாதத்தை ஷை உத்ஸவாசாரியர் அடைகிறது. ஷை ஆசாரியர், உபாத்தியாயர் இவர்களுக்கு மாலைகளெல்லாம அறுதி மாலைகள்.

இவ்விதம் யாகசாலைக்காரியங்களான பிறகு ஷை ஆசாரியரால் நியமிக்கப்பட்டிருக்கும் பரிசாரகர் ஷை யாக சாலைக்கதவைப் பூட்டிச்சாவியை, ஷை ஆசாரியருக்காக தம கைவசமே வைத்துக் கொள்ளுகிறது. இனி 2 ஸன்னிதிகளிலும் மேல் ஆக வேண்டிய தளிகை அமுது செய்வித்தல் முதலிய காரியங்களெல்லாம் அந்த ந்த கோவில் தினமான முறை அர்ச்சகர்களால் நடத்தி வரப்படு கிறது.

இப்படி ஆவணிபூ சுக்லபக்ஷம் தசமியன்று மிருத்ஸங்கிரஹணமும், அங்குரார்ப்பணமும் உத்ஸவாசாரியர் செய்துவிட்டு, உடனே தமது பரிசாரகர்களுடன் தமது ஸ்தலத்திற்குப்போய்ச் சேருகிறது.

தமிழ்நாடு ... காப்பக நூலகம்

சிலவிடங்களில்சண்டாள மிலேச்சாதி ஸஞ்சாரமும், சில விடங்களில் மற்ற மனுஷ்யர்களுடைய ஸஞ்சாரமும், எச்சல் துப்பல்களும் அடிக்கடி உண்டாவதை பிரபுக்களே பார்த்திருக்கக்கூடும் ஆகையால் இனியாவது எழுந்தருளப் பண்ணிவைப்பதாயிருந்தால் புண்யாஹவாசனம் செய்யும்படி தருமப்பிரபுக்கள் ஆர்டர் செய்வார்களென்று நம்பப்படுகிறது.

2. "15-வருஷ காலமாக கோர்டு வியவஹாரம் செய்து அர்ச்சகர்கள் மாத்திரம் வடகலையானதுபோல" என்ற ஆவணி ஸஞ்சிகை 3-வது பக்கத்தில் அன்பர்வாக்கியம் காணப்படுகிறது அர்ச்சகர் அநாதிகாலமாக வடகலையாராக இருக்க, இந்த அபூத கல்பனைக்குக்காரணம்யாதோ. இதற்கு ஆதாரம் எழுதுவாரென எதிர்பார்க்கிறோம்.

3. அந்த ஸஞ்சிகையின் அதேபக்கத்தில். புதிதாய்வந்த தென்கலையாரில்லையாதலால் கூத்தாடவேண்டாமென்கிறார். அவர் அரையரை அறியார்போலும். அரையர் நால்வரில் 2-அரையர் வடகலையார் என்பதற்கு அவரது தாயாதிகளின்னும் வடகலையாராகவும், ஆசௌசாதிகளை இன்னுமிருவரு மனுஷ்டித்து வருகிறார்களெனவும், இந்தத்தீட்டைச்சுருக்கிச்கூறின பழைய வடகலை அரையருக்கு பகல்பத்து மண்டபத்தில் 19—12—20ல் பெருமாள் முதல் ஆழ்வாராசாரியர்கள் வரையில் புரோக்ஷணம் நடத்தப்பட்டதெனவும் எல்லோருமறிந்திருக்க அன்பர் தென்கலை வடகலையானார் என்கிறார்.

ஸ்ரீ:

பிரகடனம்.

இந்த பத்திரிகையானது பிரதி மாதம் பௌர்ணமிதோறும் வெளி வரும்.

ஸ்ரீரங்கமென்ற நகரத்தின் நிர்மாண கிரமமும், அங்குள்ள கோயிலி லெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ரங்கநாதன், ஸ்ரீ ரங்கநாயகித்தாயார் முதலிய தேவஸ்தானங்களுடைய நடவடிக்கை விபரமும், பூர்வகாலாநுஷ்டானக் கிரம விஷயங்களும், தற்போதிய நடவடிக்கைகளும், இனிவரும் காலபேதங் களால் ஏற்படும் நடவடிக்கைகளும் எந்தெந்தவிதமென்பதை இந்த தமிழ் நாடு வடநாடுள்பட சகல ஆஸ்திகஜனங்களாலும் அப்பொழுதப்பொழுது அறியப்படவேண்டுமென்ற நல்ல எண்ணத்துடன் இந்தப்பத்திரிகை வெளி யிடலாயிருக்கிறது.

ஸகலஜன க்ஷேமார்த்தமாகவே ஸநாதனமாய் இந்தப்பெரிய பெருமா ளும், கோயில் வடிவமான ஸ்ரீரங்க நகரமும் ஏற்பட்டிருப்பதால், மஹா ராஜாக்கள் முதல் ஸகலரும் கோயில் தருமாநுஷ்டானங்களைத் தவராமல் நடந்துவரும்படி, ஒவ்வொரு ஆஸ்திகரும் உள்ளபடியே கவனிக்கவேண்டி யது அவசியமாயிருக்கும்பொழுது, ஸ்ரீரங்க வர்த்தமானம் அப்போதைக் கப்போது ஒவ்வொருவரும் எளிதில் எப்படி அறிவார், என்ற காரியத்திற் காகவே இவ்விதம் சாசுவதமாய் ஓர் மாதாந்த ஸஞ்சிகையாக நடக்கும் விஷ யங்களை எல்லோரும் ஏககாலத்தில் பார்க்கவும் கேட்கவும்படி வெளியிட லாயினேன்.

ஆகையால் சுவல்ப சந்தாவாகிய ரூ. ஒன்றை நேரிடவாவது மனுஷி யாள் மூலியமாவது கொடுத்து இந்த ஸஞ்சிகா வடிவமான பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அயலூர்களுக்குத் தபாற் கூலி எட்டணா அதிகம்.

இங்ஙனம்,

யதார்த்தவாதினீ பத்திரிகையின் எடிடரும் பப்ளிஷருமாகிய

வித்துவான் R. V. இராமானுஜாசாரியார்,

164 நெ. வீடு, தெற்கு சித்திரவீதி, ஸ்ரீரங்கம்.

திருச்சினாப்பள்ளி டிஸ்டிரிக்டு.